**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.522/2023**

**Prosecution witness : அ.சா. 9** **Date : 20.12.2024**

| | |
|---|---|
| **Name :சண்முகம்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஆத்தூர் வட்டம் தம்பம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022–ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது, கடந்த 09.08.2023–ம் தேதி இரவு 10.00 மணிக்கு இவ்வழக்கில் காவல் உதவி ஆய்வாளர் மாதைய்யன் அவர்கள் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, பழனியப்பன் மகன் கதிரேசன் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று புகார்மனுவின் தன்மைக்கு ஏற்ப மேச்சேரி காவல் நிலைய குற்றஎண். 440/2023 ச/பி 279, 337 304(A) இதச பிரிவில் வழக்கு பதிவு செய்தார்.

2) பிறகு அவர் கடந்த 09.08.2023 ம் தேதி இரவு 11.00 மணிக்கு சம்பவயிடமான மேச்சேரி டூ தொப்பூர் ரோடு சந்திரமா கடை பஸ்ஸ்டாப் குக்கம்பட்டி பிரிவு ரோடு அருகே சாட்சிகள் சசிகுமார் மற்றும் கார்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்.

3) பின்ன்ர வழக்கு கோப்பை பெற்ற நான் இவ்வழக்கின் சாட்சிகளை கதிரேசன், சுரேஷ்குமார், நந்தினி, ரத்தினவேல், கதிரவன், பாரத், சசிகுமார், கார்த்தி, ரங்கராஜ் பழனியப்பன், பச்சியம்மாள் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் எதிரி கணேஷ் என்பவரை கடந்த 14.08.2023 ம் தேதி மதியம் 02.30 மணிக்கு கைது செய்யப்பட்டு நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பிறகு இவ்வழக்கில் காயம் பட்ட சுரேஷ்குமார் என்பவர் விபத்திற்கு பிறகு சேலம் அம்மணி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு மருத்துவர் சசிகுமார் என்பவர் சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு தயார் செய்தார். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.5** ஆகும். காயச் சான்றிதழ் **அ.சா.ஆ.6**, போலீஸ் இன்டிமேஷன் **அ.சா.ஆ.7** ஆகும். இவ்வழக்கில் காயம்பட்ட வளர்மதி என்பவர் சிகிச்சையின் போது வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக தெரிவித்து மருத்துவர் அருள் அவர்கள் இறப்பை உறுதி செய்து விபத்து பதிவேடு தயார் செய்தார். விபத்து பதேிடு **அ.சா.ஆ.8** ஆகும். இறப்பு உறுதி அறிக்கை **அ.சா.ஆ.9** ஆகும்.

பின்னர் காயம்பட்ட வளர்மதி என்பவர் சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதால் அவருடைய சவத்தை பிண அறையில் வைக்கப்பட்டது. பிறகு நான் இறந்து போன வளர்மதி பிரேதத்தின் மீது இறப்பின் உன்மை தன்மை அறியும் பொருட்டு பிரேத விசாரணை பஞ்சாயத்தார் முன்னிலையில் செய்யப்பட்டது. இறப்பின் உண்மை தன்மை அறிய வேண்டி மருத்துவர் கோகுலரமணன் அவர்களிடம் முதல் நிலை காவலர் பிரபு என்பவர் மூலமாக பிரேதம் அடையாளம் காட்டப்பட்டு கடந்த 10.08.2023 ம் தேதி மதியம் 02.00 மணிக்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.10** ஆகும். சடலக்கூறாய்வு அறிக்கை **அ.சா.ஆ–11** ஆகும். பிறகு நல்லடக்கம் செய்வதற்காக உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் பிண மாறுதல் காரணமாக வழக்கு கோப்பை ஆய்வாளர் வெங்கட்ரமணன் வசம் ஒப்படைத்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.</u>**

ஒம்/– தே.மயில்சாமி,
குற்றவியல் நடுவர் எண்.2
மேட்டூர்.